# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2074/33 - 2018 ජුනි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.06.07

*2074/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16 (2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

உத்தேச 364 அலகுகள் கொண்ட மாடி வீட்டுத் தொகுதி (3 ஆம் கட்டம்)
காலி வீதி, ரன்தொம்ப வடக்கு, பலபிட்டிய

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக "பத்தரமுல்ல, சுஹுருபாய, 17 ஆவது மாடி" என்னும் முகவரியில் அமைந்துள்ள நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் மீள்நிரப்பப்பட்ட காணியில் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2018.06.08 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

*இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான* www.coastal.gov.lk *மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| 1. | மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | - இல. 500, டி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 |
| 2. | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் | - புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10 |
| 3. | மத்திய சுற்றாடல் அதிகார சபை | - "பரிசர பியச", இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை |
| 4. | நகர அபிவிருத்தி அதிகார சபை | - 6 மற்றும் 7 ஆம் மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்லை |
| 5. | வீதி அபிவிருத்தி அதிகார சபை | - டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை |
| 6. | மாவட்டச் செயலகம் | - காலி |
| 7. | பிரதேச செயலகம் | - பலப்பிட்டி |
| 8. | பிரதேச சபை | - பலப்பிட்டி |
| 9. | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் | - மாவட்ட அலுவலகம், காலி |
| 10. | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் | - பிரதேச செயலகம், இல. 274, பில்லகொட, உணவட்டுன, காலி |

இந்த உத்தேச மாடி வீட்டு அபிவிருத்தித் திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2018.06.08 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பதில் பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.

06-755

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.